### செங்கிலிகுப்பம் – பாப்பனபள்ளி குறுக்கே தடுப்பணை!

# அகரம்சேரி கூடநகரில் பாலாற்றில் மேம்பாலம் கட்டப்படும் என்று அறிவித்ததற்கு நன்றி!

## சட்டப் பேரவையில் ஆம்பூர் தொகுதி - அ.செ.வில்வநாதன் பேச்சு!

சென்னை, ஏப். 8–

சட்டப் பேரவையில் பொதுப் பணித்துறை மானியக் கொள்கையில் ஆம்பூர் தொகுதி உறுப்பினர் அ.செ.வில்வநாதன் பேசுகையில் செங்கிலி குப்பம் – பாப்பனபள்ளி குறுக்கே தடுப்பணை, அகரம் சேரி கூட நகரில் பாலாற்றில் மேம்பாலம் கட்டப்படும் என்று அறிவித்தமைக்கு நன்றி தெரிவித்தார்.

சட்டப் பேரவையில் ஆம்பூர் தொகுதி உறுப்பினர் அ.செ.வில்வநாதன் பேசியதாவது:–

இன்று பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது எனக்குப் பேச வாய்ப்பளித்த முதலமைச்சர் அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், கொறடா அவர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன்.

திராவிட மாடல் ஆட்சியை நடத்திவரும் முதலமைச்சர் அவர்கள் தொலைநோக்கு திட்டங்களைத் தமிழ்நாட்டுக்கு கொண்டுவந்து, சமத்துவம், சமூக நீதி, எல்லார்க்கும் எல்லாம் என்ற அடிப்படையில் ஆட்சி நடத்திவரும் திராவிட நாயகர் – முதலமைச்சர் அவர்களை இருகரம் கூப்பி வணங்குகிறேன். துணை முதலமைச்சர் அவர்கள் விளையாட்டுத் துறையிலும் சமூக நலத் திட்டங்களை மக்களுக்கு கொண்டுசேர்க்கும் திராவிட நாயகர் – முதலமைச்சர் அவர்களின் தூதுவராகச் செயல்பட்டு, இந்தியாவுக்கே உதாரணமாகச் சிறப்பாக பணியாற்றிக் கொண்டிருக்கும் இளஞ்சூரியன் உதயநிதி அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கழகப் பொதுச் செயலாளர், நீர்வளத் துறை அமைச்சர் அவர்களையும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களையும், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களையும், நிதி மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களையும், அனைத்து அமைச்சர் பெருமக்களையும் மற்றும் சக சட்டமன்ற உறுப்பினர்களையும், மாவட்டக் கழகச் செயலாளர் அவர்களையும் வணங்குகிறேன்.

"இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்
–என்ற குறளுக்கு ஏற்ப;

ஒரு காரியத்தை ஒருவர் எப்படிச் செய்து முடிப்பார் என்பதை ஆராய்ந்து, பார்த்து அதற்குப்பிறகு அந்தக் காரியத்தை அவரிடம் ஒப்படைக்க வேண்டுமென்ற வள்ளுவன் வாக்கிற்கு இணங்க, முதலமைச்சர் அவர்கள், பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களும், எங்கள் திருப்பத்தூர் மாவட்டப் பொறுப்பாளரும் எ.வ.வேலு அவர்களை பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் துறை அமைச்சராக நியமித்து, தமிழ்நாட்டில் இதுவரை கண்டிராத அளவிற்கு இத்துறையின்மூலம் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பல பணிகளை தமிழ்நாடு முழுவதும் செய்து வருவதை நான் சில உதாரணங்களைச் சொல்லி, என்னுடைய ஆம்பூர் சட்டமன்றத் தொகுதியில் நிறைவேற்றப்பட்ட பணிகளுக்கும் நன்றிகூறி, அவர்களை வணங்குகின்றேன்.

**தமிழ்நாட்டில்**
**பொதுப்பணித்துறை பொற்காலம்!**

தமிழ்நாட்டில் பொதுப் பணித்துறையின் பொற்காலமாக இந்தத் திராவிட மாடல் ஆட்சி உள்ளது. ஏனென்றால் அகிலமே அண்ணாந்து பார்க்கும் மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகம், கிண்டி பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை, சென்னையில் உலகத்தரம் வாய்ந்த கலைஞர் நினைவிடம், டெல்லியில் தமிழ்நாடு இல்லம் அமைத்திட எடுத்துள்ள முன்னெடுப்புகள், தமிழ்நாட்டில் பொன்னான முதலமைச்சரின் ஆட்சியில் என்றால் அது மிகையாகாது. (மேசையைத் தட்டும் ஒலி)



இந்தத் துறையில் என்னுடைய ஆம்பூர் சட்டமன்றத் தொகுதியில் நான்கு ஆண்டுகளில் செய்த பணிகளை மட்டும் இங்கே எடுத்துக்கூற விழைகிறேன். ரூ.24.31 கோடி மதிப்பீட்டில் ஆம்பூர் அரசு மருத்துவமனையில் புறநோயாளிகள் பிரிவு மற்றும் ICU ஆண் ward, பெண் ward, lab, scan, மருந்தகம் மற்றும் X–ray அறைகள் கட்டடம் கட்டி முடிக்கப்படும் நிலையில் உள்ளது.

ரூ.2.05 கோடி மதிப்பீட்டில் மாதனூர் பெரியங்குப்பம் அரசு உயர்நிலைப் பள்ளியில் 100 மாணவர்களுக்கான குடியிருப்பு விடுதிக் கட்டடம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ரூ.1.69 கோடி மதிப்பீட்டில் ஆம்பூர் உதவி ஆணையர் அலுவலகத்திற்கு புதிய வணிகவரி அலுவலகக் கட்டடம், ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் மாதனூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் புறநோயாளிகள் பிரிவு, ரூ.48 இலட்சம் மதிப்பீட்டில் மாதனூர் கால்நடை மருந்தகம், ரூ.54 இலட்சம் மதிப்பீட்டில் வடசேரி கால்நடை மருந்தகம், ரூ.42 இலட்சம் மதிப்பீட்டில் மின்னூரில் அரசு மேல்நிலைப் பள்ளி வகுப்பறைக் கட்டடம், நெடுஞ்சாலைத் துறையில் ரூ.13 கோடி மதிப்பீட்டில் கடாம்பூர்–கைலாசகிரி–உதயேந்திரம் வரை சாலை அகலப்படுத்துதல், ரூ.4 கோடி மதிப்பீட்டில் அரங்கல்துருகம் சாலை அகலப்படுத்துதல், ரூ.2 கோடி மதிப்பீட்டில் பெரியாங்குப்பம் சாலை புதுப்பிக்கப்பட்டுள்ளது. ரூ.1 கோடி மதிப்பீட்டில் ஆம்பூர் bypass சாலை புதுப்பிக்கப்பட்டுள்ளது. ரூ.2 கோடி மதிப்பீட்டில் ஆம்பூர் நகர சாலை, ரூ.1 கோடி மதிப்பீட்டில் ஈச்சம்பட்டு காட்டு வெங்கடாபுரம் சாலை, ரூ.1 கோடி மதிப்பீட்டில் நாய்கனேரி சாலை, ரூ.3 கோடி மதிப்பீட்டில் மிட்டாளம் முதல் குட்டகந்தூர் வரை சாலை அகலப்படுத்துதல், ரூ.2 கோடி மதிப்பீட்டில் கம்மகிருஷ்ணப்பள்ளி சாலை தரம் உயர்த்துதல், ரூ.80 இலட்சம் மதிப்பீட்டில் வடகரை சாலை தரம் உயர்த்துதல், ரூ.2 கோடி மதிப்பீட்டில் நாச்சர்குப்பம் சாலை, ரூ.2 கோடி மதிப்பீட்டில் மாதகடப்பா புதிய பாலத்துடன் சாலை, ரூ.5.19 கோடி மதிப்பீட்டில் பள்ளிகுப்பம் சாலை, ரூ.2.92 கோடி மதிப்பீட்டில் ஆசனாம்பட்டு சாலை, ரூ.44 இலட்சம் மதிப்பீட்டில் ஆசனாம்பட்டு வடிநீர் கால்வாய் என இத்துறைமூலம் நமது முதலமைச்சர் அவர்களுடைய ஆட்சியில் செய்யப்பட்டுள்ளது என்பதை இந்தநேரத்தில் இந்த அவையில் பதிவு செய்ய விரும்புகி றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**தரைப்பாலம்**
**உயர்மட்ட பாலமாக மாற்றுதல்!**

அதுமட்டுமல்ல, தரைப்பாலத்தை உயர்மட்டப் பாலமாக மாற்றுதல் பணி; ரூ.2 கோடி மதிப்பீட்டில் ஆம்பூர் கஸ்பா சாலையில் உயர்மட்டப் பாலம், ரூ.2 கோடி மதிப்பீட்டில் மிட்டாளம் பகுதியில் உயர்மட்டப் பாலம், ரூ.2 கோடி மதிப்பீட்டில் கதவாளம், பார்சனப்பள்ளி பகுதியில் இரண்டு உயர்மட்டப் பாலங்கள் என்று முதல்வர் அவர்கள் ஆட்சியில் இன்று நடைபெற்றிருக்கிறது. ரூ.25 கோடி மதிப்பீட்டில் கென்னடிகுப்பம் இரயில்வே மேம்பாலம்;

22 கோடி மதிப்பீட்டில் பச்சகுப்பம், அழிஞ்சிகுப்பம் கிராமங்களை இணைக்கும் பாலற்றின் குறுக்கே உயர்மட்ட மேம்பாலம் ஆகிய–இந்த எண்ணற்ற திட்டங்களெல்லாம் இன்னும் பல திட்டங்களைக்கூட, கூற விரும்புகிறேன். இப்படிப்பட்ட திட்டங்களெல்லாம் இந்தத் துறையின் மூலம் மட்டும் நமது திராவிட மாடல் ஆட்சியை நடத்தும் முதலமைச்சர் அவர்களுடைய ஆட்சியில் என்னுடைய தொகுதியில் நடைபெற்றுள்ளது என்பதை இந்த நேரத்தில் பெருமையுடன் சொல்ல, கடமைப்பட்டுள்ளேன்.

**நெடுஞ்சாலைத் துறை!**

தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் துணையாக இருப்பது தொழில் துறை. அந்தத் தொழில் துறையின் வளர்ச்சிக்கு பக்கபலமாக இருப்பது இந்த நெடுஞ்சாலைத் துறை. தமிழ்நாட்டில் பல்வேறு நெடுஞ்சாலைகள் இருவழிச் சாலைகளாகவும், நான்கு வழிச் சாலைகளாகவும், நமது திராவிட மாடல் ஆட்சியில் அமைக்கப்பட்டுள்ளது. நெடுஞ்சாலைத் துறையின்மூலம் கன்னியாகுமரியில் விவேகானந்தர் நினைவுப் பாறையில் இருந்து அய்யன் திருவள்ளுவர் சிலை வரை கடலில் கண்ணாடி இழைப்பாலம் சுற்றுலாத் துறைக்கு ஒரு மைல் கல்லாக அமைந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) பல மாநிலங்களிலிருந்த,இங்கு வருகை தந்த சுற்றுலா பார்க்கும் பொதுமக்கள் எல்லாம், நமது முதலமைச்சர் அவர்களை பாராட்டிச் செல்லும் அளவிற்கு, அந்த மைல் கல்லாக, பாலம் அமைக்கப்பட்டுள்ளது என்பதை இங்கு பதிய வைக்க விரும்புகிறேன். அதேபோன்று உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின்மூலம், ரூ.9 கோடி மதிப்பீட்டில் வடகறை–மின்னூர் இடையே மேம்பாலம், 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கதிவாளத்தில் தடுப்பணை, நீர்வளத் துறையின் மூலம் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பெரியாங்குப்பத்தில் தடுப்பணை, வடச்சேரி, பாப்பனப்பல்லி, வடகரை, மேல்சாணங்குப்பம், சின்னபள்ளிகுப்பம் ஆகிய உவப்பு நீர் இருந்து ஊராட்சிகளுக்கு குடிநீர்த் திட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு, முடிவடையும் நிலையில் உள்ளது.

வேளாண்மைத் துறையில் மாதனூரில் வேளாண்மை விரிவாக்க மையக் கட்டடம் 2.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டது. உயர்கல்வித் துறையில் ரூ.2.21 கோடி மதிப்பீட்டில் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் புதிதாக வகுப்பறைகள் கட்டும் பணிகள் ஆகியவற்றை வழங்கிய முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிதியாண்டில் கல்வித் துறைக்கு மட்டும் 46,767 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி பெருமை சேர்த்துள்ள நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நான் இந்த அவையில் ஒன்றை நினைவுக் கூர கடமைப்பட்டுள்ளேன். 23–3–2025 அன்று சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், அவருடைய முன்னாள் முதலமைச்சரும், இப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் விவசாயிகளுக்காக வேட்டி மடித்துக் கட்டி ஏரி வண்டல் மண்ணை வாரி கொடுத்தார் என்று அவையில் பதிய வைத்தார். ஆனால் 1997–1998–ல் 'நமக்கு நாமே' என்ற திட்டத்தை அறிவித்து, அப்போதே எங்கள் ஆம்பூர் தொகுதி, விண்ணமங்கலம் ஊராட்சியில் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) வேட்டியை மடித்துக் கட்டி, தலைப்பாகை கட்டி, மண் வெட்டியால் மண்ணை எடுத்து கொடுத்து விவசாயிகளை பெருமைப்படுத்தியவர் என்பதை இந்த அவையில் பதிய வைக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அது மட்டுமல்லாமல் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கியும், சுமார் 7 ஆயிரம் கோடி விவசாயிகளின் கடனை தள்ளுபடி செய்து, விவசாயிகளுடைய வாழ்வினை ஒளிர செய்தவர் எங்கள் கழகத் தலைவர் அன்றைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் என்பதை மீண்டும், மீண்டும் இந்த அவையில் பதிய வைக்க விரும்புகிறேன். அதுபோல், திராவிட மாடல் ஆட்சியை நடத்தி வரும் எங்கள் முதலமைச்சர் ஓர் இலட்சத்து 81 ஆயிரம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு வழங்கி, விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்திய பெருமை (மேசையைத் தட்டும் ஒலி) என்றென்றும் எங்கள் முதலமைச்சருக்கு உண்டு என்பதை இந்த அவையில் பதிய வைக்கின்றேன்.

எனது தொகுதியின் முக்கியமான கோரிக்கைகளை இங்குச் சொல்ல கடமைப்பட்டுள்ளேன். ஆம்பூர் சட்டமன்றத் தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான ஆம்பூர் ரெட்டித்தோப்பு இரயில்வே மேம்பாலம் முந்தைய ஆட்சியில் அம்மையார் அவர்களால் 110 விதியின்கீழ் அறிவித்து கிடப்பில் பத்தாண்டுகளாக...

போடப்பட்ட ஆம்பூர் ரெட்டித் தோப்பு இரயில்வே மேம்பாலம் முதலமைச்சர் அவர்கள் ஆட்சியில் 'சொல்வதை செய்வோம், செய்வதை சொல்வோம்' என்ற வாக்கிற்கிணங்க (மேசையைத் தட்டும் ஒலி) முதலமைச்சர் அவர்கள், அந்த மேம்பாலத்தை இந்த நிதியாண்டில் வழங்கவேண்டுமென்று இருகரம் கூப்பி, ஆம்பூர் தொகுதி மக்கள் சார்பாக கேட்டுக்கொள்கின்றேன். அதே போன்று சட்டமன்ற அலுவலக கட்டடத்திற்கு நிலம் கையகப்படுத்தப் பட்டுள்ளது. அதற்கு கட்டடம் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

திருப்பத்தூர் மாவட்டத்தின் ஆரம்ப எல்லைப் பகுதியான ஆம்பூர் சட்டமன்றத் தொகுதியில் புதிய ஆய்வு மாளிகை கட்டித் தர வேண்டும்.

சட்டமன்ற கூட்டத்தொடரின்போது நான் வைத்த கோரிக்கையினை ஏற்று ரூ.29 கோடியில் செங்கிலிகுப்பம்–பாப்பனபள்ளி பாலாற்றின் குறுக்கே தடுப்பணை, ரூ.37 கோடியில் அகரம்சேரி–கூடநகரம் பாலாற்றில் மேம்பாலம், ரூ.6 கோடி மதிப்பீட்டில் கொல்லமங்கலம் –தட்டான்குட்டை இடையே அகரம் ஆற்றின் குறுக்கே இணைப்புப் பாலம், ரூ.6 கோடி மதிப்பீட்டில் பள்ளிகுப்பம் அகரம் ஆற்றில் பாலம், ஆம்பூர் நகரில் புதிய பேருந்து நிலையம் ஆகியவற்றை இந்த நிதியாண்டியல் வழங்கிய எங்கள் திராவிட மாடல் ஆட்சி நடத்தும், முதலமைச்சர் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) கோடான கோடி நன்றிகளை ஆம்பூர் தொகுதி மக்கள் சார்பாக தெரிவித்துக்கொள்கிறேன்.

இதனை சட்டமன்றத்தில் அறிவித்த நீர்வளத் துறை அமைச்சர், நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுமட்டுமல்லாமல் முதலமைச்சர் அவர்களால் முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்...

கலைஞரின் கனவு இல்லம் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம், விடியல் பயணத் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம், நான் முதல்வன் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப் பெண் திட்டம், மக்களுடன் முதல்வர் போன்ற அற்புதமான திட்டங்களை அறிவித்த முதலமைச்சர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) துணை முதலமைச்சர் அவர்களுக்கும் கோடான கோடி நன்றிகளைத் தெரிவித்து, இந்தத் திட்டங்களுக்கெல்லாம் உறுதுணையாக இருந்து, எங்கள் மாவட்டத்திற்கு கொண்டு வந்த பொறுப்பு அமைச்சர் எ.வ.வேலு அவர்களுக்கும், அனைத்துத் துறை அமைச்சர்களுக்கும், மேலும், எனக்காக உழைத்து, வெற்றிபெறச் செய்த ஒன்றிய, நகரச் செயலாளர்களுக்கும், அனைத்து கழக நிர்வாகிகளுக்கும், தோழமைக் கட்சியைச் சார்ந்த அனைத்து நிர்வாகிகளுக்கும், என்னுடைய மனைவி, பிள்ளைகள், உற்றாற், உறவினர்கள், நண்பர்களுக்கும், என்னை இரண்டு முறை வாக்களித்து வெற்றிபெறச் செய்த ஆம்பூர் தொகுதி மக்களுக்கும் பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நன்றி கலந்த வணக்கங்களைத் தெரிவித்துக்கொண்டு. . .

தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும்! (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு அ.செ.வில்வநாதன் பேசினார்.



பொதுமக்கள், வியாபாரிகள், பக்தர்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று திருத்தணியில் இருந்து திருச்செந்தூர் வரை புதிய விரைவு அரசு பேருந்து சேவையை திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ கொடியசைத்து தொடங்கிவைத்தார். உடன் பொது மேலாளர் மணி, துணை மேலாளர் குணசேகரன், நகரச் செயலாளர் வி.வினோத் குமார், உள்பட கழக நிர்வாகிகள், கவுன்சிலர்கள், போக்குவரத்து ஊழியர்கள், தொமுச நிர்வாகிகள், பொதுமக்கள், வியாபாரிகள் பக்தர்கள் கலந்து கொண்டனர்.

### கொடைக்கானலில் கடும் போக்குவரத்து நெருக்கடி :

# மாற்றுப் பாதை எப்போது அமைக்கப்படும்?

## பேரவையில் - ஐ.பி.செந்தில்குமார் கேள்வி!

சென்னை, ஏப்.8-

கொடைக்கானலில் கடும் போக்குவரத்து நெருசலைப் போக்க மாற்றுப்பாதை எப்போது அமைக்கப்படும் என்று பேரவையில் ஐ.பி.செந்தில்குமார் வினா எழுப்பினார்.

இதுபற்றிய விவாதம் வருமாறு:-



**ஐ.பி. செந்தில்குமார்:** நம்முடைய தமிழ்நாட்டினுடைய சர்வதேச அடையாளமாக இருக்கக்கூடிய கொடைக்கானல், மிகவும் கடும் போக்குவரத்து நெருக்கடியில் இருக்கிறது. குறிப்பாக, வார நாட்களில் கிட்டத்தட்ட 34 மணி நேரம் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு மக்கள் பெரிதும் அவதிக்குள்ளாகிறார்கள். நம்முடைய அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே இந்த பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மாற்றுவழிப் பாதை அங்கே உருவாக்குவதற்கு ஆய்வுகள் மேற்கொண்டிருக்கிறார்கள். அந்தப் பணி என்ன நிலையில் இருக்கிறது?

**அமைச்சர் எ.வ.வேலு:** நம்முடைய உறுப்பினர் தம்பி செந்தில்குமார் அவர்கள் குறிப்பிடுவதைப் போல, இந்தியாவில் இருக்கிறவர்களெல்லாம், தமிழ்நாடு மாத்திரம் அல்ல, இந்தியாவில் இருக்கின்ற சுற்றுலாப் பயணிகள்கூட கொடைக்கானலுக்கு வருகிறார்கள். அதனால் SEASON ல் பார்த்தீர்களென்றால், வண்டிகள் உள்ளே செல்வதற்கு பலமணி நேரம் ஆகிறது. ஏற்கெனவே இதே சட்டமன்றத்தில் பல நேரங்களில் எதிர்க்கட்சியாக இருக்கின்றபோதிலும், உறுப்பினர் செந்தில் குமார் அவர்கள் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். அதனடிப்படையில் இதற்கு முக்கியத்துவம் தர வேண்டுமென்பதற்காக,

நானே நேரடியாக அவரை அழைத்து கொண்டு, கொடைக்கானலுக்குச் சென்று, மற்றொரு மாற்றுப் பாதை அமைப்பதற்கு வேண்டிய பணிகளை ஆய்வு செய்வதற்காக நான் சென்றிருந்தேன். அதற்குபின்னர் தற்போது நம்முடைய அரசாங்கத்தின்மூலமாக பொறியாளர்களை அழைத்து, இந்த ஆண்டே அதுகுறித்து விரிவான திட்ட அறிக்கை தேவையென்று தெரிவித்து, அதற்கு முக்கியத்துவம் தந்து, தற்போது அப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அது முழுமையடைந்தவுடனே முதல மைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு சென்று, எவ்வளவு ரூபாய் தேவைப்படுமோ, அதற்கு இசைவு பெற்று, அதற்கு இந்த ஆண்டே முக்கியத்துவம் தரப்படும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### சட்டப்பேரவையில் அறிவிப்பு: ரூ.5 கோடியில் ரிஷிவந்தியம் தொகுதி

# வாணாபுரம் தாலுகா புதிய அலுவலக கட்டிடம் கட்டப்படும் !

## அரசுக்கு - வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. நன்றி!

ரிஷிவந்தியம், ஏப்.8-

கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் தொகுதியில், வாணாபுரம் தாலுகா புதிய அலுவலக கட்டிடம் கட்ட ரூ.5 கோடியில் நிதி ஒதுக்கீடு செய்து சட்டப் பேரவையில் அறிவிக்கப் பட்டுள்ளது என வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., தெரிவித்துள்ளார்.

ரிஷிவந்தியம் தொகுதி மக்களின் நீண்ட வருட கோரிக்கையான பல்வேறு வருவாய் கிராமங்களை உள்ளடக்கி வாணாபுரம் தனி தாலுகாவாக உருவாக்க தமிழக முதல்வர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் கோரிக்கை வைத்தார். இதனைத் தொடர்ந்து 2022-23 ஆம் ஆண்டு சட்டப்பேரவை கூட்டத்தொடரில் நடைபெற்ற வருவாய்த்துறை மானிய கோரிக்கையின் போது ரூ.7.5 கோடி மதிப்பில் வாணாபுரத்தில் புதிய தாலுகா தொடங்க உள்ளதாக சட்டமன்றத்தில் வருவாய்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் அறிவித்தார்,

அதன் பின் வானாபுரத்தை தலைமை இடமாகக் கொண்டு புதிய தாலுகாவை 2023 ஆம் ஆண்டு ஜூலை 19ஆம் தேதி தமிழக துணை முதல்வர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் கள்ளக்குறிச்சியில் நடைபெற்ற நலத்திட்ட விழாவில் துவக்கி வைத்தார், அதனைத் தொடர்ந்து வாணாபுரம் ஊராட்சிக்கு உட்பட்ட பகண்டை கூட்டு சாலையில் உள்ள வட்டார சேவை மைய அலுவலகத்தில் தற்காலிகமாக தாலுகா அலுவலகம் இயங்கி வந்தது அந்த அலுவலகத்தில் போதுமான இட வசதி இல்லாததால் பகண்டை கூட்டுச் சாலையில் உள்ள ஜான் போஸ்கோ பள்ளி வளாகத்தில் உள்ள போதிய இடவசதி உள்ள கட்டிடத்தை தேர்வு செய்து இந்த இரண்டு கட்டிடத்தையும் பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலை துறை அமைச்சர் எ.வ.வேலு 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 3ஆம் தேதி அன்று திறந்து வைத்தார், தற்போது வரை அதே கட்டிடத்தில் இயங்கி வருகிறது, இந்த நிலையில் தற்போது நடைபெற்று வரும் சட்டப்பேரவை பட்ஜெட் கூட்டத் தொடரில் வருவாய்த்துறை மானிய கோரிக்கை யில் புதிதாக உருவாக்கப்பட்ட வாணாபுரம் புதிய தாலுகா அலுவலக கட்டிடம் ரூ.5 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும் என வருவாய்த் துறை அமைச்சர் அறிவித்துள்ளார் என வசந்தம் க. கார்த்திகேயன் எம்.எல்.ஏ தெரிவித்துள்ளார்,



மேலும் நிதி ஒதுக்கீடு செய்த தமிழக முதல்வர், கழகத் தலைவர், சமூகநீதி காலர், திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின், தமிழக துணை முதல்வர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின், மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சர் எ.வ.வேலு, வருவாய் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் ஆகியோருக்கு ரிஷிவந்தியம் தொகுதி மக்கள் சார்பாக கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழக செயலாளர் வசந்தம் க. கார்த்திகேயன் எம்.எல்.ஏ. நெஞ்சம் நிறைந்த நன்றிகளை தெரிவித்து கொண்டார்.




திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில், தேசிய கல்விக் கொள்கையை தமிழ்நாடு எதிர்க்கிறது, சிறப்பு கருத்தரங்கில் கழக மாணவர் அணி செயலாளர் இரா.ராஜீவ்காந்தி உரையாற்றினார். உடன் கழக மருத்துவர் அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், மாநில துணை செயலாளர் இரா.தமிழரசன், பிரியா விஜயரங்கன், காலேஜ் கு.ரவி, மு.க.கௌதமன், இரா.மின்னல் கமல், ஏ.வெங்கடாஜலபதி, ஆ.மாதேஸ்வரன், டி.வி.எம்.நேரு, மங்கலம் பிரபாகரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் நகர தி.மு.க. சார்பில் தேர்தல் பணிக்குழு 1க்கான BLA2, BLC கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் திருப்பத்தூர் மாவட்டச் செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். திருப்பத்தூர் நகர செயலாளர் எஸ்.ராஜேந்திரன் இக்கூட்டத்திற்கு தலைமை தாங்கினார். இக்கூட்டத்தில் திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி, ஜி.ரமேஷ், கே.ஏ.குணசேகரன், டி.ரகுநாத், சு.அரசு, சங்கீதா வெங்கடேசன், வீ.வடிவேல், மு.க.அருள்நிதி, ஏ.ஆர்.சபியுல்லா மற்றும் நகர கழக நிர்வாகிகள், BLA2, BLC நிர்வாகிகள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள்.